# சிறுவர் அமுதம்

19.7.1997

எண்ணம் 8 கிண்ணம் 7



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

சின்னஞ் சிறு குருவி போலே—நீ
திரிந்து பறந்து வா பாப்பா
வண்ணப் பறவைகளைக் கண்டு
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா

—சுப்பிரமணிய பாரதி—

அன்புச் சிறுவர் சிறுமியரே!


மிக நீண்டதான கோடை விடுமுறையைக் குதூகலமாகக் கழித்திருப்பீர்கள். வெளிநாடுகளுக்குச் சென்றிருப்பீர்கள். உள்ளூரிலேயே உறவினர்கள், நண்பர்கள், வீடுகளுக்குச் சென்றிருப்பீர்கள். பள்ளிப் படிப்பையும் மறந்து, விளையாட்டும், வேடிக்கையாகவும் பொழுது போயிருக்கும். கல்லூரிகள் தொடங்கி விட்டன. புது வகுப்பு, சில புதிய முகங்கள்....... .

பொறுப்புக்களுடனான சுமையான கல்வி, வகுப்பேற்றப் பட்ட நிலையில் உங்களுக்குக் கஷ்டத்தைத் தந்திருக்கும். கல்வியைச் சுகமான சுமையாக நினைத்துக் கொள்ளுங்கள். அதைப் பெரும் சுமையாக நினைத்தீர்களானால் எதிர்காலத்தில் வாழ்க்கையில் நீங்கள் தேவையானதென்றை இழந்து விட்டீர்கள் என்பதை உணருவீர்கள். காலத்தைக் கருத்தில் கொண்டு முன்னேறுங்கள்.

"வெற்றி நிச்சயம்."

—ஆசிரியை—

# கிறிஸ்மஸ் கொண்டாட்டம்
## (சில செய்திகள்)



☦ கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொள்ளும் வழக்கம் 1842ம் ஆண்டு இங்கிலாந்தில் ஆரம்பிக்கப் பட்டது. பதினாறு வயதுச் சிறுவன் வரைந்த படம் முதலாவது வாழ்த்து மடலாக அமைந்தது.

☦ கிறிஸ்து-மஸ் என்பது கிறிஸ்துவின் பூஜை என்று கருத்து ஆகும். கிறிஸ்மஸ் கொண்டாட்டம் கிறிஸ்துவின் பிறந்த நாளாகக் கொண்டாடப்

படுகின்றது. கி.பி 1131ம் ஆண்டில் இருந்து இது கொண்டாடப் படுகின்றது. பாலகனான யேசு கிறிஸ்துவுக்கு வெளிநாடுகளில் இருந்து மன்னர்கள் பரிசுப் பொருட்களைக் கொடுத்து அனுப்பினார்கள். அதுவே இன்று ஒருவருக்கு ஒருவர் பரிசுப் பொருட்களைக் கொடுக்கும் வழக்கமாக மாறி இருக்கிறது.

✝ விழாக் காலங்களில், கிறீஸ்தவர்கள் வீடுகளுக்கு முன் நட்சத்திரக் கூண்டுகளைத் தொங்க விடுவார்கள். இந்த ஒளிக் கூண்டுகள் தொங்க விடப் படுவதன் மூலம் யேசு இங்கே இருக்கிறார் என்று மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்காகவே இக்கூண்டுகளைத் தொங்க விடுகிறார்கள். யேசு பிறந்த வேளையில், அவரைத் தேடி வந்த மூன்று துறவிகளுக்கு வழிகாட்டியாக வந்த வால் நட்சத்திரம் பெத்லகேம் கிராமத்து மாட்டுத் தொழுவம் வரை வந்து வழிகாட்டியது என்றும், பாலன் யேசுவைத் துறவியர்கள் கண்டதாகவும் கதை. அந்த ஞாபகமாகவே இக்கூண்டுகள் தொங்க விடப்படுகின்றன.

✝ கிறிஸ்மஸ் மரம் ஜேர்மனியிலேயே முதல் முதலில் இடம் பெற்றது. 1605ம் ஆண்டு, உலகின்

ஒளியாகிய யேசுவின் அடையாளமாக மெழுகுவர்த்திகளையும், மரத்தின் உச்சியில் வர்ணக் கடதாசிகளினால் செய்யப் பட்ட நட்சத்திரங்களையும் தொங்க விட்டனர்.

❖ இங்கிலாந்து நாட்டு அரசன் ஒரு முறை வேட்டைக்குச் சென்றான். வேட்டைக்குச் சென்ற அரசன் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு நாட்டுக்கு வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் தன் நண்பர்களுடன் காட்டிலேயே விருந்தைக் கொண்டாடினான். சமையல்காரன் கைவசம் இருந்த உணவுப் பொருட்கள் எல்லாவற்றையும் சேர்த்துச் சமைத்தான். அப்படிச் செய்யப் பட்டதே கிறிஸ்மஸ் கேக் என்று வழக்கத்தில் வந்தது.

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

ஆக்க பூர்வமான சிந்தனைகள் எந்தக் கஷ்ட காலத்திலும் நேர் நின்று எம்மைக் காப்பாற்றும். -ஹில்-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

பணக்காரராய்ச் சாக வேண்டும் என்பதற்காக, வறுமையாக வாழ்வது வடி கட்டிய பைத்தியக் காரத்தனம். -டெஸிமஸ்

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

காணும் இடங்களில் எல்லாம் வலிந்து, வளைய வரும் போலா நெக்ரி என்ற ஜேர்மனி நடிகையை சார்லி அன்புடன் வரவேற்று உரையாடுவார். போலா நெக்ரியும் செல்லும் விருந்துகளில் எல்லாம் சார்லி இருக்குமிடத்தைத் தேடி ஓடி வருவாள். வரமுடியாத கட்டத்தில் பார்வையைச் சார்லி மீதே பதிய வைத்துக் கொண்டாள். இது பார்வையாளர்கள், பத்திரிகையாளர்கள் எல்லோரையும் கவர்ந்தது.

பிறகு என்ன நடந்திருக்கும் என்று ஊகிக்கத் தேவையில்லை. "சார்லி போலாவைக் கைக்குள் வைத்துக் கொள்கிறார்" என்றது பத்திரிகை ஒன்று. "சார்லியும் போலாவும் இரகசியமாகச் சந்தித்துக் கொள்கிறார்கள்." "சார்லி போலாவை விரைவில் திருமணம் செய்து கொள்ள இருக்கிறார்." இவ்வாறு பலவிதமாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின.

இத்தகைய செய்திகள் சார்லியை வேதனைக்கு உட்படுத்தின. பத்திரிகைச் செய்திகள் மேலும் மேலும் ஊகித்துச் செய்திகளைத் தந்து கொண்டிருக்கவே, சார்லிக்கு மிகவும் கோபமும் வேதனையும் அதிகரித்தது. விருந்தொன்றில் இருவரும் சந்தித்துக் கொண்டபோது, இருவரும் ஒருவரோடு ஒருவர் காரசாரமாக சண்டையிட்டுக் கொண்டனர்.

அடுத்த நாளன்று சார்லிக்கு, தொலைபேசி ஒன்று வந்தது. போலா உடல் நலமின்றி இருப்பதாகவும், சார்லியை ஒருதரம் காண விரும்புவதாகவும், போலா தயவாகக் கேட்டுக் கொண்டதாகவும் செய்தியில் போலாவின் வேலைக்காரப் பெண் கூறினாள். சார்லி போலாவிடம் சென்றபோது போலா உண்மையிலேயே நோய்வாய்ப் பட்டிருந்தாள்.

சில நாட்களின் பின் பாரமவுண்ட் நிறுவனத்தின் நிர்வாகி சார்லியைச் சந்தித்தார். "பத்திரிகைச் செய்திகள் போலாவை நோயாளியாக்கி விட்டது. நீங்கள் விரும்பினால் போலாவைத்

திருமணம் செய்து கொள்ளுங்கள். அவரை நம்பிப் பல லட்சம் பணம் முதலிட்டு இருக்கிறோம்." என்று சார்லியை வேண்டிக் கொண்டார்.



சார்லி அவரைப் பார்த்து, "உங்களின் முதலீட்டுக்காக நான் போலாவைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமா?. இதென்ன! இது எப்படிச் சரியாகும்?." என்றார். "அப்படியானால் நீங்கள் போலாவை இனிமேல் சந்திக்கவோ, பேசவோ கூடாது." என்று கண்டிப்புடன் கூறினார் நிர்வாகி. "அது போலாவின் விருப்பம். என்னிடம் ஏன் சொல்கிறீர்கள்?." என்றார் சார்லி.

இத்துடன் போலோவின் சமாச்சாரம் தீர்ந்து விட்டதாகச் சார்லி நம்பினார்.

-தொடரும்-

## சொற்களைக் கண்டு பிடியுங்கள்:

**முடிவு:**

இ-வ
அசைவுகள்
அசை
அவதி
திராட்சை
சுமை
தாங்கி
சுமைதாங்கி
பாத்தி
பாத்திரம்
திரம்(வலிமை)
மாலி
சக்கை
சம்பு
புற்று
நோய்
புற்றுநோய்
செயல்
மாண்பு
அவதானம்
தானம்
கதி
பாரு
தானியம்
தா

வ-இட
சுள்
அசுரன்
பச்சை
அகம்
வடை
மை
தம்
கை
கன்னம்
தரம்
புண்
மா
பாதி
தந்தி
கடுகு
கடு
தாயகம்
கம்

மே-கீ
மானம்
அமைதி
அமை
புதிய

அவதாரம்
தாரம்
தா
தடு
தனி
நோய்
கட்டை
வம்சம்
தாதி
பா
பாடு

கீ-மே
அபாயம்
கண்
புலி
தடு
திசை
மடை
குதி
தாயம்
வசை
கரு
கரும்பலகை
பலகை

1.கபிலன்பரமசிவம்- ✠ Düsseldorf
2.ஜெயானந்தன் கண்ணன் -Berg.Gladbach
3.முகுந்தன்மகேந்திரன் -Berg. Gladbach
4.பிரகாஸ் கந்தவனம் -Norway
5.ஜெயதீபா இரத்தினசசபாபதி-Eschesbronn
6.ஜெயமாலா இரத்தினசபாபதி-Eschelbronn
7.மோகன் இரத்தினசபாபதி -Eschelbronn
8.சோபி யோகராசா -Norway
9.சுஜீனா சண்முகலிங்கம் -Clausthal
10.சுகீவன் சண்முகலிங்கம் -Clausthal


✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

தங்களின் பிள்ளைகள் தங்களுக்குப் பெருமை தேடித் தரவேண்டும் என்று எதிர்பார்ப்பதுதான், பெற்றோர் செய்யும் அடிப்படைத் தவறு.

-ரஸ்ஸல்-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

# அன்புள்ள அண்ணன்



பாலு எட்டாம் வகுப்பு மாணவன். அகிலா பாலுவின் தங்கை. இருவரும் ஒன்றாகவே சைக்கிளில் பாடசாலைக்குப் போவார்கள். சகோதர பாசத்துக்கு இணையாக அவர்களை மற்றவர்கள் பேசிக் கொள்வார்கள். பாலுவும் அகிலாவும் பிரிந்து பாடசாலைக்கு வருவதையோ, போவதையோ யாரும் கண்டதில்லை.

அன்று கடைசிப் பாடமாகத்தமிழ்ப் பாடம் இருந்தது. பாடங்களைத் திருத்துவதற்காக வீட்டுக்குக் கொண்டு சென்ற ஆசிரியர் திருத்திய அப்பியாசக் கொப்பிகளைப் பார்த்த போது, அகிலாவின் கொப்பி தவறுதலாக விடுபட்டிருப்பது தெரிந்தது. தன் தவறுக்காக அகிலாவிடம் மன்னிப்புக்

கேட்டார். திறமையாக அப்பியாசங்களைச் செய்திருந்த மாணவர்களின் கொப்பிகளை, அன்று அதிபரிடம் சேர்ப்பிக்க வேண்டும். அன்று எழுதும் கட்டுரை உட்பட அதிபரிடம் சேர்ப்பிக்க வேண்டும். அதிலேயே சிறந்த மாணவர்கள் தெரிவு செய்து மாநிலத்திலேயே சிறந்த மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு அனுப்ப வேண்டும்.

ஆசிரியர் செய்வதறியாது யோசித்தார். பாலு விஷயம் தெரிந்ததும், தன் வகுப்பாசிரியரிடம் அனுமதி பெற்று, தமிழாசிரியரின் வீட்டுக்குச் சென்று அகிலாவின் கொப்பியை வாங்கிக் கொண்டு வந்தான். கல்லூரி முடிந்த பின் அகிலா கட்டுரையை எழுதி முடிப்பது என்று முடிவாயிற்று. அகிலாவும் சம்மதித்தாள். கட்டுரையை எழுதி முடித்து விட்டு வெளியே வந்த போது பாலுவைப் காணவில்லை. வெளியே கடலை விற்கும் பாட்டி அவளிடம், "மாதா கோவிலில் நிற்பதாக உன் அண்ணன் சொன்னான்." என்று கூறினாள்.

பாலு மாதா கோயிலுக்கு ஏன் போக வேண்டும்?. கல்லூரிக்குப் போகும் வழியிலேயே தான் மாதா கோயில் இருக்கிறது. தன்னிடம் சொல்லாமல் அங்கு அண்ணன் ஏன் செல்ல வேண்டும்? என்று தனக்குள் கோபத்தோடு கூறிக் கொண்டு, வந்த அகிலா கோயிலுக்கு வெளியே பாலுவைக் காணாமல் மாதா கோயிலுக்குள் சென்று பார்த்தாள். பாலு மெழுகுவர்த்தி கொளுத்தி மாதாவை வணங்கிக் கொண்டிருந்தான். அகிலாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தன் தங்கையைக் கண்டதும், பாலு வேண்டுதலை முடித்துக் கொண்டு வெளியே வந்தான். அகிலா அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள். பின் அவனிடம், "நீ தான் பிள்ளையார் பக்தனாயிற்றே! எப்போது கிறீஸ்துவ மதத்தில் சேர்ந்து கொண்டாய்!" என்று கேலியாகக் கேட்டாள். "நான், பிள்ளையாரை விரும்பி வணங்குபவன் தான். இன்று வீட்டுக்குச் சென்றதும் பிள்ளையார் கோவிலுக்குச் செல்ல வேண்டுமென்று நினைத்தேன். முடியவில்லை. தெய்வங்களைப் பலவடிவங்களில் வழிபட்டாலும், தெய்வங்கள் எல்லாமே ஒன்று தான். அதனால் என் பிரார்த்தனையை மாதாவிடம் வேண்டிக் கொண்டேன். மாதா பிள்ளையாரிடம் கூறட்டுமே!" என்றான்.

அப்படி என்ன வேண்டுதல் செய்தாய்?, அண்ணா" என்று கேட்ட அகிலாவிடம் "என் தங்கை அவசர அவசரமாகக் கட்டுரை எழுதிக் கொடுத்திருக்கிறாள். இந்த மாநிலத்திலேயே சிறந்த மாணவியாக அவள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன்." என்று கூறியதும் அண்ணனை அன்புடன் அணைத்துக் கொண்டாள் அகிலா.

~பாமினி அருள்வரதன்~

◆◆கொகுவின் (நுளம்பு) உணர் கொம்புகள் வெப்ப நிலையில் நாலாயிரத்தில் ஒரு பங்கு வேறுபாட்டைக் கூட உணரும் சக்தி உள்ளவை.

# காந்தியும் நேருவும்



இந்தியாவின் தேசபிதாவான மகாத்மா காந்தியும், ஜவகர்லால் நேருவும் பாதயாத்திரை மேற் கொண்டிருந்தனர். ஒரு கிராமத்துக்குச் சென்றிருந்த வேளையில், ஒரு பள்ளத்தைத் தாண்ட வேண்டி ஏற்பட்டது. நேரு சிறிது தூரம் பின்னுக்கு வந்து ஓடிச் சென்று பள்ளத்தைக் கடந்து விட்டார். காந்தியோ, நீளமான மரப்பலகை ஒன்றைக் குறுக்கே வைக்கச் செய்து அதில் நடந்து சென்று கடந்தார்.

நேரு வேடிக்கையாக, "பாபுஜி, நீங்களும் என்னைப் போலவே, பாய்ந்து பள்ளத்தைக் கடந்திருக்கலாமே?" என்று காந்தியிடம் கேட்டார்.



அதற்கு காந்தி "இந்தப் பள்ளத்தைத் தாண்ட நீங்கள் எவ்வளவு பின்னுக்கு வந்து தாண்ட முடிந்தது. நான் முன் வைத்த காலைப் பின்னே வைக்க விரும்பவில்லை. இருந்த இடத்திலிருந்தே முன்னேற விரும்புகிறேன்." என்றார் சிரித்துக் கொண்டே.

# குயில்

காகம், கிளி, மயில் போன்ற பறவைகளைப் பற்றி அறிந்திருக்கிறீர்கள். குயிலைப் பற்றியும் அறிந்திருப்பீர்கள். ஆனால் குயில்கள் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் ஐரோப்பிய நாடுகளில் காணப்படுவதில்லை. இலங்கை, இந்திய நாடுகளிலும், சீனாவிலும் கூடுதலாகக் காணப்படுகின்றன.

குயில் காகத்தைப் போன்றே கறுப்பு நிறமாகக் இருக்கும். ஆனால் உருவத்தில் சிறியவை. பெரும்பாலும் பூஞ்சோலைகள், மாந்தோப்புக்கள், ஆலமரம் போன்ற பெரிய மரங்களில் வாழ்கின்றன. கூடு கட்டி வாழும் வாழ்க்கை இல்லை. இவைகள் போடும் சத்தம் மிகவும் இனிமையானவை. கூக்கூ என்று கேட்கும். குயிலின் சத்தத்தைக், குயில் கூவும் என்பார்கள்.



குயிலுக்குக் கோகிலம் என்றும் பெயருண்டு. இவை மரங்களிலுள்ள பழங்களையே விரும்பி உண்ணும். சில

வேளைகளில் மரநத்தைகளையும் விரும்பிச் சாப்பிடும். பழங்களையே சாப்பிடும் தன்மை கொண்டதால், பெரும்பாலும் பெரிய அடர்ந்த மரங்களிலேயே வாழும். கூடு கட்டி வாழ்வதில்லை. ஆனால் ஆணும் பெண்ணுமாகவே சோடியாகவே இவை வாழ்கின்றன.

ஆண்குயில்கள் கருமை நிறமாக இருக்கும். பெண்குயில்கள் பழுப்பு நிறம் கொண்டவை. வெள்ளைத் திட்டுத் திட்டாக உடலெங்கும் காணப்படும். பெண்குயில்களை விட ஆண்குயில்கள் கறுப்பாக இருந்தாலும், பார்ப்பதற்கு அழகாக இருக்கும். கூடுதலாகக் குயில் மறைந்தே வாழும்.

கூடு கட்டி வாழாத குயில்களின் இனப்பெருக்க வாழ்க்கையே சுவையானது தான். காகங்களின் இனப்பெருக்க காலத்தையே குயில்களும் தேர்ந்தெடுக்கின்றன. முட்டை இட்டு அடைகாக்கும் காகத்தின் கூட்டிலிலேயே குயில் முட்டை இடும். ஆண் குயில்கள் காகத்தின் கூடுகளைச் சுற்றிப் பறக்கும் தங்களின் முட்டைகளை அபகரிக்கவே குயில் வட்டமிடுகின்றது என்ற நினைவில் காகங்கள் எல்லாம் ஆண்குயிலைக் கலைக்கும்.

ஆண்குயில்களும் காகங்களை ஏமாற்றி வெகுவாக அலைக்கழிக்கும். அந்த வேளையில் பெண்குயில்கள் காகத்தின் முட்டையை வெளியே எடுத்துப் போட்டு விட்டு முட்டையிடும். எத்தனை முட்டை இடுகின்றதோ அந்த எண்ணிக்கையில் காகத்தின் முட்டையைப் போட்டு உடைத்து விடும். கூடுதலாக இரண்டு முட்டைகளையே இடும். காகமும் குயிலின் முட்டையையும் சேர்த்து அடைகாக்கும். குஞ்சுகளை வளர்ப்பதும் காகங்கள்தான். வளர்ந்த பின் தான் குயில்களைக் காகங்கள் வித்தியாசம் காணுகின்றன.

கூடு கட்டாமலே, அடைகாக்காமலே, குஞ்சை வளர்ப்பதற்குச் சிரமப் படாமலே தன் சந்ததியைப் பெற்றுக் கொள்ளும் குயிலின் சாமர்த்தியம் வியப்பைத் தருகின்றதல்லவா?

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

தமக்குப் போட்டியாக உள்ளவர்களிடம் எவர் மதிப்புக் கொடுத்து போட்டியைத் தொடங்குகிறாரோ, அவரது வீரம் போற்றுதற்கு உரியது.

-ப்யூமஸ்-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

## வினாவிடைப்போட்டி முடிவுகள்:

1. "சிந்துசாஹர்" என்னும் கடலை உங்களுக்குத் தெரியுமா? தற்போது உள்ள பெயர் தெரியும். சினிமாப் பாடலொன்று கூட இருக்கிறதே!
அன்பு, மரபு, தும்பி, துக்கம், கலகம், படகு, பால் (அரபிக்கடல்).

2. முதல் முதல் திறந்தவெளிப் பல்கலைக் கழகம் இங்கு தான் ஆரம்பிக்கப் பட்டது. நாடு தெரிந்தது தான்.
இரவல், பங்கு, கிண்ணம், பலா, சந்தம், பந்து. (இங்கிலாந்து)

3. புகையிலை உற்பத்தியில் முதலிடம் வகிப்பது இந்த நாடுதான்.
சீதக்காதி, சேனாதிபதி. (சீனா)

4. வலது கண்ணைப் புற்றுநோயால் இழந்து விட்ட போதும், துப்பறியும் நிபுணராக இவர் நடித்த தொலைக்காட்சித் தொடர் மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. இவரை நீங்கள் அறிவீர்களா?
பீடு, புற்று, அலறல், உயிர், பாசம், கல், பக்கம். கொடுங்கோலன், சலங்கை, கம்பு, போதல். (பீற்றர் பால்க்) –Peter Falk, (கொலம்போ) –Columbo.

5. தேயிலை உற்பத்தியில் இப்பொழுதும் முதலிடத்தை வகிப்பது இந்த நாடுதான்.

இரவு, அலகு, பங்கு, உலக்கை. (இலங்கை)

எழுதியவர்கள்:

1.ஜெயதீபா இரத்தின சபாபதி- Eschelbronn
2.மோகன் இரத்தினசபாபதி- Eschelbronn
3.ஜெயமாலா இரத்தினசபாபதி- Eschelbronn
4.ஜெயானந்தன் கண்ணன்- Berg.Gladbach
5.சோபி யோகராசா- ✠ Norway
6.பிரகாஸ் கந்தவனம்- Norway
7.முகுந்தன் மகேந்திரன்- Berg.Gladbach
8.சுஜீனா சண்முகலிங்கம்- Clausthal
9.சுகீவன் சண்முகலிங்கம்- Clausthal
10.சுஜீவ் சண்முகலிங்கம்- Clausthal

✠ இந்த அடையாளம் உள்ளவர்கள் பரிசைப் பெறுகிறார்கள்.

# விளையாட்டுப் பிள்ளை



சங்கர் பொன்னம்மா வுக்கு ஒரே பிள்ளை. தந்தை இல்லாத அவனைப் பொன்னம்மா கண்ணை இமை காப்பது போலக் காத்தான். சிறு பிள்ளையைப் போலவே அவனை வளர்த்ததால், பொறுப்பு இல்லாதவனாகச் சங்கர் வளர்ந்து வந்தான்.

அம்மா எவ்வளவு புத்தி சொன்னாலும் அவன் கேட்பதில்லை. பொன்னம்மா அப்போது தான், தான் விட்ட தவறை உணர்ந்தாள்.

சங்கருக்குப் படிப்பும் சரி வரவில்லை. வேறு இடங்களில் வேலைக்குச் சேர்த்தாலோ, இரண்டொரு நாளிலேயே திரும்பி வந்து விடுவான். வேலை கடினமாக இருக்கின்றது

என்று சொல்லி வேலைக்குப் போகாமல் விட்டு விடுவான். உடம்பை வளைத்து வேலை செய்யவே கஷ்டப் பட்டான். பொன்னம்மாவுக்கும் சலிப்பு ஏற்பட்டது. "ஏதோ நான் உயிரோடு இருக்கும் வரையில் சாப்பிடட்டும்" என்று எண்ணிக் கொண்டு வாழ்ந்தாள்.

சில வருடங்களில், பொன்னம்மா நோய் வாய்ப்பட்டாள். அப்போதும் சங்கர் அம்மாவுக்கு வருத்தம் என்று கவலைப் பட்டு அழுதானே தவிர, தான் உழைத்தாவது அம்மாவின் வருத்தத்தை மாற்ற வேண்டும் என்று நினைக்கவில்லை. ஒரு நாள் பொன்னம்மா படுத்த படியே மயங்கி விட்டாள். எழுந்ததும் தான் வேலை செய்த இடத்தில் பணம் வாங்கி வந்து வைத்தியசாலைக்குக் கூட்டிச் செல்லும்படி சங்கரிடம் கூறினாள். தாய் வேலை செய்த இடத்துக்குச் சென்று, முதலாளியிடம் தாயை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல, பணம் உதவும்படி கேட்டான்.

அப்போது முதலாளி, "உன் அம்மா இங்கு வேலை செய்து உன்னைக் காப்பாற்றினாள். கடந்த இரண்டு மாதமாக வேலைக்கு வர

அவனால் முடியவில்லை. அவள் சேகரித்து வைத்திருந்த பணம் செலவழியும் வரை பேசாமல் இருந்து விட்டு இப்போது பணத்துக்கு என்னிடம் வந்து கையேந்துகின்றாயே!" என்று கோபமாகக் கேட்டார். சங்கர் கோபத்துடன் "அம்மா சாகப் போகிறாள். காப்பாற்ற உதவி செய்யச் சொன்னால்..... புத்தி சொல்லுகிறீர்களே!" என்று கத்தினான்.

அப்போது முதலாளி சிரித்துக் கொண்டே, "தம்பி, அதோ பார்த்தாயா? அந்தத் தென்னைமரத்தை. அது உன் அம்மா நீரூற்றி வளர்த்த மரம். தன்னாலான உதவியாக, அப்போது காய்க்கத் தொடங்கியிருக்கின்றது. இதற்கும் உனக்கும் ஒரே வயது என்று உன் அம்மா கூறுவாள். இது பலன் தரும் போது உன்னால் ஏன் பலன் தர முடியவில்லை. நினைத்துப் பார்." என்றார்.

சங்கருக்கு அப்போது தான் மனதில் உறைத்தது. அவன் முதலாளியிடம், "ஐயா, நான் என் தவறை உணர்ந்தேன். இப்பொழுது உதவி செய்யுங்கள். நான் உங்களிடமே வேலை செய்து கடனை அடைத்து விடுகின்றேன்." என்று கெஞ்சிக் கேட்டான்.

**முதலாளியும் அவனுக்குப் பணம் கொடுத்தார். சங்கர் மனத்தில் வேலை செய்ய வேண்டும் என்ற உறுதியுடன் தாயை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றான்.**

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

வறுமைக்கும், பிணிக்கும், காரணமாக இருப்பவர்கள் மிகக் கொடிய இரண்டு குற்றங்களைச் செய்கிறார்கள்.

-பெர்னாட்ஷா-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

இடம் காலம் எவற்றாலும் பாதிக்கப் படாமல் கொள்கைகள் என்றென்றும் நிலைத்திருப்பவை. ஆனால் இடம் காலம் இவற்றிற்கு உகந்தவாறு வழக்கங்கள் மாறுபடுகின்றன.

-மகாத்மா காந்தி-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

வாய்மை அனைத்திலும் மேலானது உண்மையான நடத்தையே ஆகும்

-புத்தன்-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

## கலப்படம்



கந்தசாமி மிகவும் படித்தவர். எதிலும் நியாயமானவராகவே நடந்து கொள்பவர். கள்ள வேலைகள் அவருக்குப் பிடிப்பதில்லை. நகரத்திலுள்ள சில கடைகளுக்கு மொத்த வியாபாரமாக தேங்காய் எண்ணெய் கொடுப்பது அவர் தான். வாடிக்கையாளரான கேசவனிடம் தேங்காய் எண்ணெய் கொடுத்து விட்டு அவர் கடையில் இருந்து தேன் வாங்கிக் கொண்டு வந்தார்.

வீட்டுக்கு வந்து தேனைச் சுவைத்துப் பார்த்த போது தான் தேனில் கலப்படம் செய்திருந்தது கந்தசாமிக்குத் தெரிந்தது. கேசவனிடம் சென்று விசாரித்த போது கேசவன் ``நான் விற்பது கலப்படமில்லாத தேன் தான். உங்கள் நாக்கில் ஏதோ கோளாறு.`` என்று சொல்லி விட்டான். நேர்மையாக நல்லமுறையில் தான் தேங்காய் எண்ணெய் கொடுக்கும் போது கேசவன் தன்னை ஏமாற்றியது கந்தசாமிக்கு வேதனையாக இருந்தது.

அடுத்தமுறை எண்ணெய் கொடுக்கும் போது வழமையாகக் கொடுக்கும் தேங்காய் எண்ணெயுடன் கடலை எண்ணெயையும் கலந்து கேசவனிடம் கொடுத்து விட்டுப் பணத்தைப் பெற்றுக் கொண்டார் கந்தசாமி. தற்செயலாக கையில் பட்ட எண்ணெயை முகர்ந்து பார்த்த கேசவன் கந்தசாமியிடம். ``தேங்காய் எண்ணெயின் மணம் வேறுபடுகின்றதே!. கலப்படம் செய்து விட்டீர்களே!`` என்றான்.

கந்தசாமி அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே. ``உமக்குத் தடிமன் போலத் தெரிகின்றது. அதனால் தான் மணம் பிடிபடவில்லை`` என்றவர் மீண்டும் ``நாம் ஒருவரை ஏமாற்றும்போது இன்னொருவர் நம்மை ஏமாற்றுவார் என்பதை அறிந்து கொள்.`` என்றா

## போகுதம்மா!



காலையில் மலர்வது மல்லிகைப்பூ
 கலைமகள் அமர்வது தாமரைப்பூ
மாலையில் பூப்பது கொடிமுல்லை
மணப்பதில் இதற்கிணை வேறில்லை!

கொடியினில் பூத்திடும் சம்பங்கி
 குழலினில் சூடுவோம் நாம் வாங்கி
வடிவினில் சிறியது மகிழம்பூ
 வாசத்தில் சிறியது தாழம்பூ!

முள்ளில் மலர்வது ரோஜாப்பூ
 முகத்தில் மலர்வது புன்சிரிப்பு!
கொள்ளை அழகாம் நீர்லில்லி
 குளத்தில் பூப்பது செவ்வல்லி!


வண்ணப் பூக்களைச் சோலையிலே,
 வகையாய் நாமும் காண்கையிலே,
கண்களுக் கினிமை ஆகுதம்மா!
 கவலைகள் பறந்தே போகுதம்மா!
-கோவூர்இசைதாசன்-

◆◆தன் காலால் உதைத்தே ஒரு மனிதனைக் கொல்லக் கூடிய அளவு பலம் வாய்ந்தது நெருப்புக்கோழி.

◆◆ அமெரிக்கப் புரட்சி **1766**இலும், பிரஞ்சுப் புரட்சி **1789**இலும், ரஷ்யப் புரட்சி **1917**இலும், சீனப் புரட்சி **1912**இலும் தோன்றின.

◆◆இந்தியாவின் கடைசி மொகலாய மன்னர் பகதுர்ஷா. **1857**ப் புரட்சியில் பங்கு கொண்ட அவர் **1862**இல் ரங்கூனில் தூக்கிலிடப் பட்டார்.

முத்துக்கள்.





ஆபரணங்களில் இரத்தினக்கற்கள் அழகுக்காகப் பதிக்கப்படுவது உங்கள் எல்லோருக்கும் தெரியும். போலியான கற்களும் இருக்கின்றன. இரத்தினக்கற்களைப் போலவே, முத்துக்களும் ஆபரணங்களில் பதிக்கப் பட்டு அழகாகச் செய்யப்படுகின்றன. முத்துக்களை மாலைகளாக்கி அணிவதும் வழக்கத்தில் உண்டு.

முற்றிய மூங்கில்கள், முற்றிய கரும்பு, சிப்பி ஆகியவற்றின் நடுவிலும் முத்துக்கள் உற்பத்தியாகின்றன என்று பழைய இலக்கியங்கள் கூறுகின்றன. தற்காலத்தில் அதைக் கண்டவர்கள் யாரும் இல்லை. போலியான செயற்கை முத்துக்களும் உண்டு.

ஆனால் ஆழ்கடலில் வாழும் சிப்பிகளுள் முத்துக்கள் இயற்கையாக விளைகின்றன. முற்காலத்தில் நிர்வாணமாகக் கடலில் மூழ்கி முத்துக்களைக் கண்டு எடுப்பார்கள். தற்காலத்தில் இதற்கென்று ஆடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. எல்லா முத்துக்களும் ஒரேமாதிரியான வடிவத்தைப் பெற்றிருப்பதில்லை. இதுவரை கண்டெடுக்கப்பட்ட முத்துக்களில் கோழி முட்டை வடிவத்திலுள்ள முத்தே பெரியதானதாகும்.

ஆனால் சிறிய முத்துக்கள் தான் கூடுதலாகக் கிடைக்கின்றன. முத்துக்களில் விலை உயர்ந்த முத்துக்கள் இலங்கையில் தான் கிடைக்கின்றன. முத்தெடுக்கும் தொழில் அரசாங்கத்தால் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றது. குறிப்பிட்ட சில நாட்களுக்குள்ளாகவே, 1,50,000 முத்துக்களை முத்து எடுப்பவர்கள் கொண்டு வருகிறார்கள். இதனால் சிப்பியினமே அழிந்து விடுமே என்று பயப்படத் தேவையில்லை. சிப்பிகளின் இனப்பெருக்கம் மிகவும் கூடுதலானவை. முத்து எடுப்பதை "முத்துக் குளித்தல்" என்று கூறுவார்கள்.

# சிங்கப்பூர் (Singapore)




தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சிங்கப்பூரும் ஒன்று. சிங்கப்பூர் மலாக்காத் தொடுகடல் பாதையில் அமைந்துள்ள ஒரு சிறு தீவாகும். மலேசியா நாட்டுக்குக் கீழே சுமாத்திரா, போர்ணியோ தீவுகளுக்கு இடையில் அமைந்துள்ளது. இத் தீவின் பரப்பு 618 சதுர கிலோ மீற்றர். இதன் தலைநகரம் சிங்கப்பூர். இந்நாட்டின் நாணயத்தின் பெயர் சிங்கப்பூர் டொலராகும் (SS). இங்கு 2.58 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். ஆசிய நாடுகளில் வளர்ச்சி அடைந்த நாடு இதுவாகும்.

இங்கு சீனர் 75 வீதமும், மலாயர் 15 வீதமும், இந்தியர்,இலங்கையர் 6 வீதமும் வாழ்கின்றனர். இங்குள்ளவர்கள் புத்த சமயம், இஸ்லாம் சமயம், கிறீஸ்தவ சமயம், இந்து சமயம் ஆகிய சமயங்களை மக்கள் பின்பற்றுகிறார்கள். மக்கள் சீனமொழி, மலேசியமொழி, ஆங்கிலமொழி, தமிழ்மொழி ஆகிய மொழிகளைப் பேசுகிறார்கள்.

1867ஆம் ஆண்டு தொடக்கம் 1959ஆம் ஆண்டு வரை பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இருந்தது. 1959ஆம் ஆண்டில் சுதந்திரம் அடைந்து, பின் குடியரசு நாடானது. இங்கு காய்கறிப் பயிர்களும், பழவகை மரங்களும், பயிரிடப் படுகின்றன. மின்சார உபகரணங்களைச் செய்தல், நிலநெய் சுத்திகரித்தல், கப்பல் திருத்துதல் போன்ற தொழில்களும் நடைபெறுகின்றன.

உலக வர்த்தக மையமாகவும் இது இருக்கிறது. இந்நாடு ஆசியான், ஐக்கிய நாடுகள் சபை ஆகிய அமைப்புக்களில் அங்கத்துவம் வகிக்கின்றது.

....................................................................

ஈழம் எங்கள்
நாடென்போம்!

இதயம் அங்கே
தானென்போம்!

-சின்ன. இராஜேஸ்வரன்-

Adr. Siruvar Amutham
Alf Str. 11
50189 Elsdorf
Germany
Tel.: 02271/66527